பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

27 12 2024 **FRIDAY** **6.30 PM**

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. முன்னாள் பிரதமர் மன்மோகன்சிங் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து மத்திய அமைச்சரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

2. மன்மோகன்சிங்கின் இறுதிச்சடங்குகள் முழு அரசு மரியாதையுடன் நாளை காலை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

3. பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களின் ஏற்றுமதி 23 புள்ளி நான்கு சதவீதம் அதிகரித்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

4. சென்னை புத்தக காட்சி இன்று தொடங்கியது.

5. வெஸ்ட் இண்டீஸுக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

--- இனி விரிவான செய்திகள் ----

<<<<<>>>>>

முன்னாள் பிரதமர் மன்மோகன்சிங்கின் மறைவுக்கு மத்திய அமைச்சரவை இரங்கல் தெரிவித்துள்ளது.

இன்று புதுதில்லியில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக்கூட்டத்தில், இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சிறந்த பொருளாதார நிபுணர் மற்றும் தலைவராக திகழ்ந்த ஒருவரை நாடு இழந்துள்ளதாக அந்த தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார சீர்திருத்தங்களுக்கு வித்திட்டவர் என்றும், பொதுவாழ்வு, அரசு பொறுப்புகளில் அவர் ஆற்றிய பணிகளும் அந்த தீர்மானத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, மறைந்த தலைவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அமைச்சரவைக்கூட்டத்தில் இரண்டு நிமிடம் மௌனம் அனுசரிக்கப்பட்டது.

மன்மோகன்சிங்கின் இறுதிச்சடங்குகள் முழு அரசு மரியாதையுடன் நாளை காலை புதுதில்லியில் நடைபெறவுள்ளது.

இதனையொட்டி மத்திய அரசு அலுவலகங்களுக்கும், பொதுத்துறை நிறுவனங்களுக்கும் அரைநாள் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, மன்மோகன்சிங் இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த அன்னாரது உடலுக்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர், பிரதமர் திரு நரேந்திர மோடி, மத்திய அமைச்சர்கள், காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே உள்ளிட்டோர் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினர்.

மன்மோகன்சிங்கின் மறைவையொட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி விடுத்துள்ள இரங்கல் செய்தியில், சவால்களை கடந்து, உச்சங்களை அடைவது எவ்வாறு என்பதற்கு அன்னாரது வாழ்க்கை எதிர்கால சந்ததியினருக்கு பாடமாக அமைகிறது என்று புகழாரம் சூட்டிஎுள்ளார்.

*(சவுண்ட் பைட் - மோடி (தமிழ்) – 59 செகண்ட்ஸ்)*

தமிழக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலினும் இன்று புதுதில்லி சென்று மன்மோகன்சிங் உடலுக்கு மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்திற்கு பல்வேறு திட்டங்களை கொண்டுவந்தவர் மன்மோகன்சிங் என்று புகழாரம் சூட்டினார்.

தமிழ் மொழிக்கு செம்மொழி அந்தஸ்து வழங்கப்பட்டதும் மன்மோகன்சிங் பிரதமராக இருந்தபோதுதான் என்றும் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

மன்மோகன்சிங்கின் உடல் நாளை காலை எட்டரை மணியளவில் காங்கிரஸ் கட்சியின் தலைமையகத்தில் பொதுமக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்பின்னர் அவரது உடல் ஊர்வலமாக எடுத்துசெல்லப்பட்டு இறுதிச்சடங்குகள் நடைபெறும் என்றும் காங்கிரஸ் கூறியுள்ளது.

மன்மோகன்சிங்கின் மறைவுக்கு பல்வேறு நாடுகளின் தலைவர்களும், தூதர்களும், பொருளாதார நிபுணர்களும் இரங்கல் தெரிவித்த வண்ணம் உள்ளனர்.

<<<<<>>>>>

டிஜிட்டல் வளர்ச்சிக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இதற்காக, பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக தகவல் தொழில்நுட்பத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

செமிகான் இந்தியா இயக்கத்தின்கீழ், நான்கு திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

செயற்கை நுண்ணறிவு இயக்கம் செயல்பாட்டில் உள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற நடவடிக்கைகள் அரசின் சேவைகள் மக்களை எளிதாக சென்றடைவதை உறுதி செய்யும் என்றும் அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

பதப்படுத்தப்பட்ட உணவுப்பொருட்களின் ஏற்றுமதி தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

2014-ஆம் ஆண்டு 13 புள்ளி ஏழு சதவீதமாக இருந்த ஏற்றுமதி அளவு, தற்போது 23 புள்ளி நான்கு சதவீதமாக அதிகரித்துள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த துறையின் மூலம் கூடுதலாக வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டு வருவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பதப்படுத்தப்பட்ட உணவுப்பொருட்களின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

சென்னை புத்தக காட்சியை துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் இன்று தொடங்கிவைத்தார்.

வரும் 12-ஆம் தேதிவரை இந்த புத்தக காட்சி நடைபெறவுள்ளது.

விடுமுறை நாட்களில் காலை 11 மணி முதல், இரவு எட்டரை மணிவரையிலும், வேளை நாட்களில் பிற்பகல் 2 மணிமுதல், இரவு எட்டரை மணிவரையும் இந்த புத்தக காட்சி நடைபெறும் என்றும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>

சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டது தொடர்பான வழக்கில் கைது செய்யப்பட்டுள்ளவருக்கும், திமுக-வுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று மாநில சட்ட அமைச்சர் திரு ரகுபதி மீண்டும் கூறியுள்ளார்.

இன்று புதுக்கோட்டையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த பல்கலைக்கழக வளாகத்தில் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

<<<<<>>>>>

சென்னை அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை தொடர்பான வழக்கில் உயர்கல்வித்துறை அமைச்சரும், காவல்துறை ஆணையரும் முன்னுக்குப்பின் முரணான தகவல்களை தெரிவிப்பதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதன் காரணமாகத்தான் இவ்வழக்கினை சிபிஐ விசாரணைக்கு மாற்ற வேண்டும் என்று வலியுறுத்துவதாக கூறினார்.

மாநிலத்தில் சட்டம் - ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படவில்லை என்றும் திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

<<<<<>>>>>

சென்னை பரங்கிமலை ரயில் நிலையத்தில் இளம்பெண்ணை ரயில்முன் தள்ளி கொலை செய்த வழக்கில், கைது செய்யப்பட்டுள்ள சதீஷ் குற்றவாளி என சென்னை மகளிர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இதுதொடர்பான வழக்கினை விசாரணை செய்த நீதிபதி ஸ்ரீதேவி இன்று இத்தீர்ப்பினை வழங்கினார்.

குற்றவாளிக்கான தண்டனை விவரங்கள் வரும் 30-ஆம் தேதி அறிவிக்கப்படும் என்றும் நீதிபதி தெரிவித்தார்.

<<<<<>>>>>

உதகையில் சர்வதேச குறும்பட விழா இன்று தொடங்கியது.

மூன்று நாட்கள் நடைபெறவுள்ள இவ்விழாவில், 45 நாடுகளை சேர்ந்த 100-க்கும் மேற்பட்ட குறும்படங்கள் திரையிடப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - சரவணன் - 45 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

நாமக்கல் மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஆட்சியர் திருமதி உமா தலைமையில் இன்று நடைபெற்றது.

----------------

திருவாரூர் மாவட்டத்தில் பிரதமரின் பயிர் காப்பீட்டுத்திட்டத்தின்கீழ் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் இணைந்துள்ளதாக ஆட்சியர் திருமதி சாருஸ்ரீ கூறியுள்ளார்.

------------------

திருப்பூர் மாவட்டம் பல்லடம் அருகே நான்கு ஆண்டுகளுக்குமுன் வாகன தணிக்கையின்போது பிடிப்பட்ட 11 டன் புகையிலைப்பொருட்களை காவல்துறையினர் தீயிட்டு அழித்தனர்.

------------------

தஞ்சாவூர் மாவட்டம் செங்கிபட்டி அருகே 600 கிலோ போதைப்பொருளை காவல்துறையினர் தீயிட்டு அழித்தனர்.

----------

வேலூர் அருகே மின்சாரம் தாக்கியதில் இரண்டு பேர் உயிரிழந்தனர்.

-------

சேலம் மாவட்டம் மேட்டூர் அருகே உத்தரப்பிரதேசத்திலிருந்து சுற்றுலா வந்திருந்த பயணிகள் நடத்திய தாக்குதலில் இரண்டு காவலர்கள் காயமடைந்தனர்.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், இந்தியா 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

வதோதராவில் நடைபெற்ற இப்போட்டியில், டாஸ் வென்று முதலில் பேட் செய்த வெஸ்ட் இன்டீஸ், தொடக்கம் முதலே விக்கெட்டுகளை இழக்கத்தொடங்கி 38 புள்ளி ஐந்து ஓவரில் 162 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

தீப்தி சர்மா 6 விக்கெட்டுகளையும், ரேணுகா சிங் 4 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

163 ரன் எடுத்தால் வெற்றி எனற் இலக்கோடு பின்னர் பேட் செய்த இந்தியா, 28 புள்ளி இரண்டு ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 167 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

தீப்தி சர்மா 39 ரன்னுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

மூன்று போட்டிகளை கொண்ட இந்த தொடரை, அனைத்து ஆட்டங்களிலும் வெற்றிபெற்று இந்தியா கைப்பற்றியுள்ளது

-----------

இந்தியாவுக்கு எதிரான நான்காவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஆஸ்திரேலியா வலுவான நிலையில் உள்ளது.

மெல்போர்னில் நடைபெற்று வரும் இப்போட்டியின் இரண்டாம் நாளான இன்று ஆட்டநேர இறுதியில் இந்தியா முதல் இன்னிங்சில் 5 விக்கெட் இழப்பிற்கு 164 ரன் எடுத்துள்ளது.

ரிஷப்பந்த் 6 ரன்னுடனும், ஜடேஜா 4 ரன்னுடனும் களத்தில் உள்ளனர்.

முன்னதாக, 6 விக்கெட் இழப்பிற்கு 311 ரன் என்ற நேற்றைய ஸ்கோருடன் முதல் இன்னிங்சை தொடர்ந்து ஆடிய ஆஸ்திரேலியா 474 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

ஸ்மித் 140 ரன் குவித்தார்.

பும்ரா 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

----------

உலக **Rapid** மற்றும் **Blitz** செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் அர்ஜுன் எரிகேசி ஐந்து சுற்று ஆட்டங்களில் நான்கில் வெற்றிபெற்றார். ஒன்றில் தோல்வியடைந்தார்.

நியூயார்க்கில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், நான்கு புள்ளிகளுடன் அவர் ஐந்தாவது இடத்தில் உள்ளார்.

மகளிர் பிரிவில் **Harika** மூன்றரை புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளார்.

**<<<<<END>>>>>**